**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.C.C.33/2018**

**DEPOSITION OF WITNESS FOR PW.4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | RAFEEQUE AHMED | **Caste** | |
| **Father / Husband Name** | **MOHAMMED GOUSE** | **Occupation** | PET SHOP |
| **Village** | **DHARNAMPET** | **Religion** | **HINDU** |
| **Taluk** | **GUDIYATHAM** | **Age** | **71** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.10.2022.**

## முதல் விசாரணை

1. நான் குடியாத்தம் தரணம்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் பெட்டிக்கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 ரேஷ்மா எனது மகள் ஆவார். எதிரி தாஜீதின் என்பவர் எனது மருமகன் ஆவார் மற்றும் எதிரி அஜீஸ் என்பவர் எனது மகளின் மாமனார் ஆவார்.

2. 04.03.2010 அன்று குடியாத்தம் பெரிய மசூதியில் எனது மகள் ரேஷ்மாவிற்கும் தாஜிதினுக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்காக ரூபாய் 2,00,000/- ரொக்கப்பணம், ரூபாய் 50,000/- இருசக்கர வாகனத்திற்கும் மற்றும் 18 சவரன் நகை அதில் 16 சவரன் நகை எனது மகளுக்கும், 2 சவரன் நகை எனது மருமகனுக்கும் வரதட்சணைகாக கொடுக்கப்பட்டது.

3. பின்பு நகைகளை விற்றுவிட்டு எனது மருமகன் குவைத்தில் பணிபுரிய சென்றுவிட்டார். 19 மாதங்கள் கழித்து திரும்பவும் வந்தபிறகு ரூபாய் 5,00,000/- உனது வீட்டில் பெற்றுக்கொண்டு வா நான் கார் வாங்கி டிராவல்ஸ் நடத்த வேண்டும் என்று எனது மகளிடம் தெரிவித்தார். மேற்படி பணத்தை நீ பெற்றுக்கொண்டு வராவிட்டால் உன்னுடன் வாழ மாட்டேன், வீட்டை விட்டு வெளியே சென்று விடு அவரது மாமனார் எனது மகனுக்கு வேறு ஒரு திருமணத்தை செய்து வைப்பேன் என்று கூறினார். காசு கொண்டுவரவில்லை என்றால் உன்னை கொலை செய்வேன் என்று எனது மருமகன் மிரட்டினார்.

4. கடந்த 08.09.2015 அன்று குடியாத்தம் மகளிர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிதரப்பில் ஆஜரான வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய சில ஆவணங்கள் பார்வையிட வேண்டியுள்ளதால் உடனடியாக குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்று கூறினார். எனவே குறுக்கு விசாரணை சாட்சியம் முடிக்கப்படுகிறது.